Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 14 ( 28 - 05 - 1991 ) செவ்வாய்க்கிழமை ஓசை: 99

## எட்டுமாத காலமாக நிவாரணஉணவு இல்லை

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள கிராமப்புறப்பகுதிகளுக்கு கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தின் பின்னர் நிவாரண உணவுப் பொருள்கள் எவையும் வழங்கப்படாத காரணத்தினால், மேற்படி கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட மாதத்தின் பின்னர், வவுனியா நகரக் கூட்டுறவுக் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிவாரணப்பொருள் (4ஆம்பக்கம்பார்க்க)

## வீரவணக்கம்

ரமேஸ்

கட்டுவனில் நேற்று முன் தினம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளி ரமேஸ் (தர்மலிங்கம் ரஞ்சன் - அச்சுவேலி தெற்கு) வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## யாழ்ப்பாணத்தில் பி. பி. ஸி. செய்தியாளர்

(யாழ்ப்பாணம்)

கொழும்பை மையமாகக் கொண்டு செயற்படும் இலங்கைக்கான பி. பி. ஸி. செய்தியாளர் கிறிஸ்மொறிஸ் யாழ்ப்பாணம் வந்துள்ளார். மற்றும் இந்தியாவைச் சேர்ந்த செய்தியாளர்கள் இருவரும் யாழ்ப்பாணத்தில் உள்ளார்கள்.

## இளைஞரை கடற்படை தாக்கியது

(புங்குடுதீவு)

சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்குச் சென்ற இளைஞர் ஒருவரை சிறிலங்கா கடற்படையினர் பலமாகத் தாக்கியுள்ளனர். இச்சம்பவம் நயினாதீவில் இடம்பெற்றுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் பிரஸ்காப இளைஞர் தனது காலில் இருந்த காயம் ஒன்றிற்கு சிகிச்சை பெறுவதற்காக நயினாதீவு அரசினர் வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது வழியில் வந்த கடற்படையினர் அவ்விளைஞரைப் பிடித்து நையப் புடைத்த பின்னர் அவரது சைக்கிளையும் பறித்துச் சென்றுவிட்டனராம். இதனால் ஒருகாயத்திற்கு மருந்துகட்டச் சென்றவர் பலகாயங்களுக்கு மருந்து கட்டிக்கொண்டு வீடு திரும்பினாராம். (22)

## சிறிலங்காவில் 1000 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

சிங்கள பௌத்தர்களின் விசேட நாளான வெசாக் தினத்தை முன்னிட்டு சிறிலங்கா ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் ஆயிரம் சிறைக்கைதிகள் நேற்று விடுதலை செய்யப் பட்டனர்.

குற்றப் பணம் செலுத்தாமல் சிறை சென்ற குற்றவாளிகளே நீதியமைச்சரின் சிபாரிசின் பேரிலும் ஜனாதிபதியின் (4ஆம் பக்கம் பார்க்க)

## வெங்கட் சந்திரசேகர் சந்திப்பு

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர்திரு சந்திரசேகர் இந்தியாவில் நிலவும் சட்டம் ஒழுங்கு பற்றி நேற்றைய தினம் இந்திய ஜனாதிபதி திரு. வெங்கட்ராமனுடன் ஏறக்குறைய 40 நிமிடங்கள் விவாதித்துள்ளார்.

## மீன்பிடி அபிவிருத்தி நிதி;

# வடக்கிற்கான ஒதுக்கீடு தெற்கில்பயன்பாடு

(நமது நிருபர்)

வடபகுதி மீனவர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கவென ஒதுக்கப்பட்ட ஒரு கோடியே நாற்பது லட்சம் ரூபா தற்பொழுது தென்னிலங்கை மீனவர்களுக்கு விசேட பயிற்சி அளிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

வடபகுதி மீன்பிடி அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ஒரு கோடி நாற்பது லட்சம் ரூபா தென்பகுதி மீன்பிடி அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. வடபகுதி மீன்பிடித் துறையின் அபிவிருத்திக்காக இப் பகுதியிலுள்ள மீனவர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்குவதற்காக இந்த நிதியைப் பயன்படுத்துவது என்று முதலில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. இத்தீர்மானத்திற்கு இணங்க கடந்த 1988ஆம் ஆண்டு இந்நிதியைப் பயன்படுத்தி புதிய மீன்பிடிப் பயிற்சிப் பாடசாலை ஒன்றை நிறுவுவதற்கு முடிவெடுக்கப்பட்டு இதற்கான முதற்கட்ட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. ஆனால் இக்காலப் பகுதியில் திடீரென ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் இம்முயற்சி உடனடியாக நிறுத்தப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட மேற்படி தொகைப்பணமும் மீளப்பெறப்பட்டு மட்டக்குளி, நீர்கொழும்பு ஆகிய மீன்பிடிப் (4ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

சிறிலங்காவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. கொழும்புத்துறைமுகத்துக்கும், நாட்டின் ஏனைய துறைமுகங்களுக்கும் வரும் கப்பல்கள் பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும் இவ்வாறு வெள்ளியன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் தர்மசிறி சேனநாயக்கா பாராளுமன்றத்தில் சுங்கத் திணைக்களத் திருத்தச் சட்டமூலத்தில் பேசும்போது தெரிவித்தார்.

## மேஜர் ஜெனரல் உட்பட மூவர் வெட்டிக் கொலை

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் தேவநாயகமும் அவரது மனைவி சரோஜினியும் கடந்த வெள்ளியன்று மாலை 6-30 மணியளவில் கொழும்பில் அவர்கள் இல்லத்தில் வைத்துக் கொலைப்பட்டனர். இராணுவ உதவியாளர் நந்தினாவும் இவர்களுடன் கொலை செய்யப்பட்டார்.

கொலைகளை மேஜர் ஜெனரல் தேவநாயகத்தின் மகன் தினேஷ் செய்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

மரண விசாரணை நடத்திய கல்கிசை மாஜிஸ்ரேட் பியசேன விஜெயசிங்க கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## இராணுவத்தாலும் ரெலோவினாலும்

# மட்டு. திருப்பழுகாமத்தில் நான்கு தமிழர் படு கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ இயக்கத்தினரும் இரு நாட்களாக மேற்கொண்ட வெவ்வேறு சம்பவங்களில் நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரு கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவங்கள் பற்றித் தெரியவருவதாவது, கடந்த (4ஆம் பக்கம் பார்க்க)

## விளையாடிய சிறுவர் மீது கடற்படை துப்பாக்கிச் சூடு

(புங்குடுதீவு)

கடற்கரையில் விளையாடிக் கொண்டு நின்ற சிறுவர்கள் மீது பீரங்கிப் படகில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இச் சம்பவம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம் பெற்றது.

அலைதீவு இறங்குதுறைக்கு சமீபமாக கடற்கரையில் சிறுவர்கள் விளையாடிக் கொண்டு நின்ற போது கடலில் சென்று கொண்டிருந்த சிறிலங்கா கடற்படை பீரங்கிப் படகொன்றில் இருந்து கரையை நோக்கி சர (4ஆம் பக்கம் பார்க்க)

## மீனவரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம்

(காரைநகர்)

காரைநகரின் கடற்கரையோரங்களில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினரும் கடற்படையினரும் மீனவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருகின்றனர்.

பொன்னாலை கடற்பகுதிக்கு மீன் பிடிப்பதற்கு செல்லும் மீனவர்களை நோக்கி படையினர் கடந்த சில நாட்களாக துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருகின்றனர். கடலில் தரித்து நிற்கும் பீரங்கிப் படகில் இருந்தும் கவிபர் தாக்கு (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒருவர் ஆறுபற்றறி கொண்டுவர அனுமதி

(கொழும்பு)

வவுனியா தடைமுகாமைத் தாண்டி பற்றறிகள் கொண்டு வரசிறிலங்கா இராணுவம் அனுமதித்துள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

வடபகுதி பயணிகள் தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தினரால் வவுனியா தடைமுகாமில் விதிக்கப்பட்ட தடையில் சிறு தளர்வு ஏற்பட்டிருப்பதாகவும், பற்றறி, சவர்க்காரம், மண்ணெண்ணை போன்ற (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் யுத்த நிறுத்த மீறல்

(வேலணை)

நாரந்தனை சரவணைப் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றைய தினம் (27-5-91) பிற்பகல் 2 மணியளவில் குடிமனைகளை நோக்கி பலதடவை ஷெல் தாக்குதல்களையும் கவிபர் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். இத்தாக்குதலினால் பல கட்டடங்கள் சேதமடைந்தன. உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை ஆயினும் மக்கள் பீதியினால் ஓடியபோது வேலிகளில் இருந்த கம்பிகள், முள்ளுகள் குத்தி காயங்களை ஏற்படுத்தியதாகவும் தெரியவருகின்றது. (14)

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள்

(யாழ்ப்பாணம்)

புளொட் குழுவினரால் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்ட இறைகுமாரன், உமைகுமாரன் ஆகியோரின் ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நேற்றுமாலை அள (4ஆம் பக்கம பார்க்க)

## சிப்பாய் தேடப்படுகிறார்

(வவுனியா)

மதவாச்சியில் குத்திக் கொல்லப்பட்ட கட்டுநாயக்க பெண் ஒருவரின் மரணம் தொடர்பாக முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் தேடப்படுகிறார்.

சாந்தினி டி சில்வா என்ற இந்த இளம் பெண் அணிந்திருந்த ரூ. 25 ஆயிரம் பெறுமதியான நகைகளும் அபகரிக்கப்பட்டுள்ளன.

# எமது பிரதேசம் மீட்கப்பட வேண்டும்
# இதில்யாருக்காவதுசந்தேகமுண்டா?

- பரா

(ஆனைக்கோட்டை)

''எமது போராட்ட வரலாற்றின் முக்கிய கட்டத்திலே நாம் கால் பதித்துள்ளோம். வயது வேறுபாடின்றி - ஆண், பெண் வித்தியாசமின்றி எதிரியினால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இனரீதியாக அழிக்கப்படுகின்றோம்.''

கடந்த 24 ஆம் திகதி இரவு ஆனைக்கோட்டைஉயரப்புலம் ஐக்கிய சனசமூக நிலையத்தால் யூனியன் விளையாட்டு மைதானத்தில் நடத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. பரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் பேசுகையில்:

''இந்த வேளையில் தமிழ் மக்களின் பங்களிப்பு என்ன? எமது பிரதேசம் மீட்கப்பட வேண்டும்; பாதுகாக்கப்பட வேண்டுமென்பதில் யாருக்காவது விருப்பமின்றி போக முடியுமா? எம்மை எவராலும் நசுக்கி விடவோ, அழித்து விடவோ முடியாது. நாம் வெட்ட வெட்ட முளைப்பவர்கள், எமது தியாகம் மிகுந்த குருதியிலும், தசைகளிலும் இருந்து புதிய புதிய போராளிகள் நாளாந்தம் உருவாகிறார்கள்: வளர்ந்து வருகிறார்கள். முழுமையான வெற்றியை நாமடைய மக்கள் அனைவரும் இணைந்து போராட முன்வர வேண்டும்.'' என்றார்.

திரு. குகதாஸன் மாஸ்டர் பேசுகையில்:

''எதிரி கருதுகிறான் எம்மை அழிப்பதுதான் தனது வெற்றி என்று. நாம் அப்படியல்ல எதிரியை அழிப்பதோடு நாம் தியாகிகளாவதிலும் வெற்றியைக் காண்கிறோம். எமது போராட்டம் தியாகிகள் செறிந்தது'' என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மகளிர் பிரிவைச் சேர்ந்த தேன்மொழியும் கூட்டத்தில் கலந்து உரை நிகழ்த்தினார். (21)

---


## ஸாஸ்ஸ்லிம்பரம்

ஆங்கில வகுப்புக்கள்-

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சைக்குரிய பிரத்தியேக தனிப்பட்ட விசேட வகுப்புக்கள் நேற்று முதல் ஆரம்பமாகியது. தொடர்பு கொள்க:- 4, பிள்ளையார் ஒழுங்கை திருநெல்வேலி. (R/ 1415)


---

## எகிப்து கடன்கள் ரத்து

(கெய்ரோ)

பாரிஸ் கிளப் எனப்படும் மேற்குநாடுகள் அணி எகிப்துக்கு வழங்கிய பொருளாதாரக் கடனுதவியில் அரைப் பங்கை ரத்துச்செய்ய முன்வந்துள்ளன; இதனால் எகிப்து சுமார் 1700 கோடி டொலர் வரை நன்மையடையும். எஞ்சிய கடனைச் செலுத்த இருபத்தைந்து ஆண்டுகாலம் தவணை வழங்கப்பட்டுள்ளது. எகிப்து இராணுவ முக்கியத்துவம்வாய்ந்த பகுதியில் இருப்பதாலேயே இச்சலுகை வழங்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

---

## பெற்றுக் கொள்ளவும்

ஈழநாதம் காரியாலயத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டவர்களின் அடையாள அட்டைகள் இருக்கின்றன. உரியவர்கள் பெற்றுக் கொள்ளவும்.

★ இராமலிங்கம் காசிலிங்கம் (திருக்கோணமலை), ★கணபதி வீரசிங்கம் (நாவற்காடு), ★ பிச்சை ஜெயராமன் (நோபேரியா), ★ யோசப் சேவியர் (கரையூர்), ★ விமலாதேவி சுப்பிரமணியம் (சுப்பிளான்), ★ சாந்தினிதேவி கந்தையா (இணுவில்) இவருடைய மணிபபேர்ஸ், ★ கணபதி மயில்வாகனம் (புலோலி), ★சிமாம்பிள்ளை சகாயநாதன் (முருங்கன்), ★ சந்தசாமி பத்மநாதன் (குரும்பசிட்டி), ★ அருணன் ராமச்சந்திரன் (வட்டுக்கோட்டை), ★ சின்னராசன் கதிர்காமநாதன் (வயாவிளான்), ★ சின்னத்தம்பி பரமசிவம் (தலைகிரியாகம), ★ ராசையா ராஜேஸ்வரி (வலிகாமம் கிழக்கு), ★ சின்னம்மா கணபதிப் பிள்ளை (சரணவாய் தெற்கு), ★ பத்மினி குலசிங்கம் (நல்லூர்), ★ வடிவேற்பிள்ளை வேதநாயகம் (கன்னாகம்), ★ கிருஷ்ணர் பேரம்பலம் (வட்டுக்கோட்டை கிழக்கு), ★ கணபதி யோசப்தெய்வேந்திரம் (சுருவில்), ★ சின்னையா கணபதிப்பிள்ளை (முள்ளியவளை), ★ சின்னப்பிள்ளை தெய்வேந்திரம் (சோனகதெரு யாழ்ப்பாணம்) ★ செல்லையா சந்திரகுமார் (கனபூமி காவர நகர்) ★ பாலலிங்கம் ஜீவதாஸ் (ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்), ★ கலாவல்லி தர்மகுலசிங்கம் (ஊர்காவற்றுறை), ★ செபஸ்தியாம்பிள்ளை லீனாவதி (ஊர்காவற்றுறை), ★ சீனியர் மீனாம்பிகை (பலாலி), ★ அழகிப்போடி கமலநாதன் (களவாஞ்சிக்குடி), ★ சண்முகம் சிறிகாந்தராசா (காரைக் காட்டு ஒழுங்கை, யாழ்ப்பாணம்), ★ பொன்னுச்சாமி சுப்புச்சாமி (தாவடி), ★ குமாரசாமி யோகராஜா (கோண்டாவில்), ★ கிருபா கிருஷ்ணசாமி (கரவெட்டி) ★ அமிர்தலிங்கம் ஆனந்தகுமார் (வட்டுக்கோட்டை), ★ சச்சிதானந்தம் சயானந்தன் (மண்டைதீவு), ★ சுந்தரடியார் தர்மரெத்தினம் (மண்டைதீவு), ★ திலகவதி அருணாசலம் (கொடிகாமம்), ★ ஏகநாதன் விஜயானந்தா (காரைநகர்), ★ மேரிமெகிடலின் அரியமலர் பரியநேசன் (புலோலி), ★ கணபதிப்பிள்ளை பஞ்சரத்தினம் (வண்ணார் பண்ணை), ★ நாராயணான் லெட்சுமணன் (யாழ்ப்பாணம்), ★ குசை செபஸ்தியாம் பிள்ளை (புதுக்குடியிருப்பு), ★ தாமோதரி மாணிக்கம் (வட்டுக்கோட்டை) ★ கணேசரெத்தினம் சுமந்தினி (மூளாய்) ★ அருணாசலம் அனுஷாதேவி (கட்டுவச்சிட்டு), ★ சின்னத்துரை ஞானசேகரம் (குருநகர்), ★ தெய்வேந்திரம் சந்திரகுமார் (தெல்லிப்பளை), ★ கந்தையா மனோன்மணி (வோகபுரம்).

---

## பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

பெண்கள் அணியும் கடிகாரம் ஒன்று யாழ். ஆஸ்பத்திரிக்கு முன்பாக விடுதலைப் புலிகளினால் கண்டெடுக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி 'ஈழநாதம்' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

---

## கற்பகதருவைக் காப்பீர்

பனைவளம் பெருக்கிடலாம் வாரீர்
பாரினில் உயர்ந்திடலாம் கேளீர்
பேணுகள் பிடிப்போர்கள் பாரீர்
பனைவளம் உயர்ந்திட வைப்பீர்

கற்பகதரு என்பார் பனையினை
காத்திட எல்லோரும் வருகிலர்
கந்தகாக் கட்டிய வீடதாம்
கட்டாயம் பனைமரம் வேண்டுமாம்

சொத்தனாக் பேணுவதில் பொழிந்தும்
சோர்வின்றி மரங்களை வெட்டுகிறார்
தற்பவன் இவருக்கு புரியாதோ
நாச வேலையை இவர்கள் வெறுக்காரோ?

வருங்காலம் வளமாக அமைய
வரும் சந்ததி நலமாக வாழ
பனை நலன் நீங்களும் காத்து
பனை பலன் தருமாறு செய்க

பைப்

---

## 3-ம் மாதநினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்

| விரஜனனம் | | விரமரணம் |
|---|---|---|
| 17 |  | 28 |
| - | | - |
| 09 | | 02 |
| - | | - |
| 69 | | 91 |

காங்கேசன்துறை நேரடி மோதலில் வீரமரணமடைந்த வீரவேங்கை

### லெப்டினனட் கபில் (பாண்டி)
### (ராஜரத்தினம் ராஜபாண்டியன்)

ஆதிக்க இருளகற்ற
மோதிடும் தியாக தீபங்கள்
சிந்தும் ஒளி வெள்ளம்
புதியதொரு காலையை
புலர வைக்கும்
பொழுது விடியும் நேரம் வரும்
கூடவே வாருங்கள்!
விடியலை விரைவாக்கலாம்!

74/1 கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு.

உனது பிரிவால் வாடும் அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார், அண்ணி, அத்தான், பெறாமக்கள், மருமகன், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்:

(B-2587)

---

## மகளிர் இல்லத்துக்கான மேற்பார்வையாளர் தேவை

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள மகளிர் இல்லத்துக்கு மேற்பார்வையாளர் தேவைப்படுகிறது.

தொடர்ந்து மேற்படி இல்லத்தில் தங்கக் கூடியவராகவும், சமூக சேவையில் ஆர்வம் உடையவராகவும், இது போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ளவராகவும் இருக்கும் பட்சத்தில் கீழே உள்ள முகவரியில் நேரில் தொடர்பு கொள்ள வேண்டும்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

83/2 காங்கேசன் துறை வீதி,
கொக்குவில். (R/1416)

---

## நினைவு கூருகின்றோம்...

1991 - 05 - 28


இறைகுமாரன்


உமைகுமாரன்

1982ஆம் ஆண்டு தேசத்துரோகிகளால் படுகொலை செய்யப்பட்ட எமது இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்களான

### பரநிருபசிங்கம் இறைகுமாரன்
### சிவபாலசிங்கம் உமைகுமாரன்

1984ஆம் ஆண்டு அக்கரைப்பற்றில் சிறிலங்காப்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் உயிரிழந்த பொதுமகன்

1986ஆம் ஆண்டு வவுனியா பூந்தோட்டம் பகுதியில் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட பொதுமகன்

1987ஆம் ஆண்டு வடமராட்சியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட ஒப்பறேசன் லிபறேசன் நடவடிக்கையின் போது படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள்

1989ஆம் ஆண்டு இந்தியப்படையினருடன் ஏற்பட்ட மோதலின் போது வீரமரணமடைந்த

லெப்.கலா (செல்லத்தம்பி கவீந்திரராசா - சொத்துவில்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்;

: விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 2591)

**சிந்தனைக்கு**

நடந்த காலத்தை நீ அறிந்தால் ஒழிய, நிகழ் காலத்தின் உண்மை உணர்வையோ, வருங்காலத்தின் குறிக்கோள்களையோ, அறிவது அரிது.

— மாக்ஸிம் கோர்க்கி.


ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 28.05.1991

தொலைபேசி

ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 3208

த.பெ.எண் 05


# தலைமையை தேடுவதில் காங்கிரஸிற்குள் சிக்கல்

இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ்காந்தி கொலை செய்யப்பட்டதிலிருந்து அப்பதவி இன்றும் நிரப்பப்படாமல் இருக்கின்றது. ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட கையோடு அவசரம் அவசரமாகக் கூடிய காங்கிரஸ் செயற்குழு ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தியைத் தலைவராகத் தெரிவு செய்தது. ஆனால் சோனியா காந்தி பதவிப் பொறுப்பை ஏற்க மறுத்ததைத் தொடர்ந்து காங்கிரஸ் கட்சி புதிய தலைவரை தெரிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சி கூறுவது போல் ராஜீவின் அஸ்தியுடன் செயற்குழு உறுப்பினர்கள் அலகாபாத் சென்றுள்ளதால் செயற்குழு கூட்டப்படவில்லை என்பதல்ல உண்மை. காங்கிரஸின் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதில் நெருக்கடிகள் தோன்றியுள்ளன என்பதே உண்மையாகும்.

நூற்றி ஆறு வருடங்கள் வரலாறு கொண்ட கட்சி என காங்கிரஸ்காரர்களால் பெருமை பேசப்படும் கட்சியால் இன்று ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க முடியாதுள்ளது. இந்நிலை காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்டதற்கான பொறுப்பை நேரு குடும்பத்தினரே ஏற்கவேண்டும்.

சுதந்திரத்தின் பின் காங்கிரஸ் கட்சித்தலைமையை ஏற்ற நேரு, காங்கிரஸ் கட்சியின் தனிப் பெருந்தலைவராகத் திகழ்ந்தார். நேரு காலத்தில் காங்கிரஸில் பல தலைவர்கள் இருந்தாலும் நேருவிற்கு நிகராக ஒரு தலைவர்களும் உருவாகவில்லை. நேருவின் தலைமைத்துவத்தில் கேள்வியும் எழவில்லை.

ஆனால் மகள் இந்திரா காந்தியின் காலத்தில் நிலை அவ்வாறில்லை. நேரு குடும்பத்தின் தலைமைக்கு எதிரான சக்திகள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டன / வெளியேறின. காங்கிரஸ் பல உடைவுகளைக் கண்டது. இதன் மூலம் காங்கிரஸ் கட்சிக்கு தலைமை வழங்கக்கூடிய நிலையில் இருந்த பலர் ஓரம் கட்டப்பட்டார்கள்.

நேருவின் பேரனின் ஆட்சிக் காலத்திலும் இந்நிலையே தொடர்ந்தது. தலைமைத்துவத்துடன் முரண்பாடு கொண்டவர்கள் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார்கள். காங்கிரஸ் கட்சிக்குள் அதிருப்தியாளர்கள் தமது எதிர்ப்பைக் காட்ட சந்தர்ப்பங்களும் வழங்கப்படவில்லை. சுமார் இருபத்திரெண்டு வருடங்களாக கட்சிக்குள் தேர்தலே நடைபெறவில்லை.

இன்று இந்தியாவில் முன்னணியில் உள்ள நான்கு தேசிய கட்சிகளில் இரண்டு காங்கிரஸில் இருந்து வெளியேறியவர்களினால் தோற்றுவிக்கப்பட்டவையே ஆகும்.

அதாவது காங்கிரஸினுள் தலைவர்கள் உருவாகாமல் இல்லை. நேரு குடும்பத்தினர் அவர்களை தலைவர்கள் ஆகாமல் தடுத்து வந்தனர் என்பதே உண்மை. அதற்கு நீண்ட காலமாக ஆட்சியில் இருந்ததன் பலனாக காங்கிரஸ் மயமாக்கப்பட்ட — நேரு குடும்ப மயமாக்கப்பட்ட — இந்திய அரசு இயந்திரம் பயன்படுத்தப்பட்டது.

இந்நிலையில் ராஜீவ் காந்தி திடீர் என மரணமடைந்ததும் நாட்டிற்கே உறுதியான ஆட்சியைத்தருவோம் என மார்புதட்டிய கட்சி தனது உறுதிப்பாட்டை பேண முடியாமல் தடுமாறுகின்றது.

இன்றும், காங்கிரஸிற்குள் முற்றுமுழுதாக தலைவர்கள் இல்லாமல் இல்லை. ஆனால், இந்தியாவைப் போன்றே பல்வேறு முரண்பாடுகள் கட்சிக்குள்ளும் இருப்பதினால் இவர்களில் ஒருவரின் தலைமைத்துவம் கட்சியின் ஒற்றுமையைக் கட்டிக்காக்குமா என்பதில் கேள்வி எழும்பியுள்ளது.

காங்கிரஸ் கட்சிக்கு புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்களின் வரிசையில் முன்னாள் அமைச்சர்களான நரசிம்மராவ், என். டி. திவாரி ஆகியோரின் பெயர்கள் முக்கியமாகஅடிபடுகின்றன. இவர்களில் நரசிம்மராவ் மூத்த காங்கிரஸ் கட்சி உறுப்பினரும், திறமை வாய்ந்தவரும் ஆவார்.

இதனால் நரசிம்மராவ் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு அதிகமாக இருப்பினும் அதனை என். டி. திவாரி ஏற்கப் போவதில்லை என்றே தெரிகின்றது. தற்பொழுது காங்கிரஸ் கட்சிக்கு கூட்டுத்தலைமை தேவை என அவர் அறிவித்ததில் இருந்தே இதனைப் புரிந்து கொள்ளலாம். அதாவது காங்கிரஸ் கட்சி தலைமையிலோ அன்றி பிரதமர் பதவியிலோ அவர் அக்கறை கொண்டுள்ளார் என்பதே இக்கூற்றின் வெளிப்பாடாகும்.

இந்நிலையில் காங்கிரஸ் கட்சி புதிய தலைமை ஒன்றைத் தேர்ந்தெடுப்பதென்பது சிரமமான காரியமாகத்தான் இருக்கும். ஆனால் இன்றைய சூழலில் தமக்குள் உள்ள முரண்பாடுகளை வெளிக்காட்டுவது தம்மைப் பலவீனப்படுத்தி விடும் என்பதை காங்கிரஸார் தெளிவாக உணர்ந்துள்ளனர். ஆகையினால் தேர்தலை முன்னிட்டு அவர்கள் தற்காலிக முடிவு ஒன்றிற்கு வரினும், காங்கிரஸின் எதிர்காலம் கேள்விக்குரியதொன்றே.

## ஆங்கிலத்தை முதன்மைப்படுத்துவது

# அன்னை மொழியான தமிழை சிறுமைப்படுத்துவதாகும்

எஸ். ஜே. இம்மானுவல்

(யாழ்ப்பாணம்)

அன்னை மொழியான தமிழை விட ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் தருவதுஎம்மை நாமே சிறுமைப்படுத்துவதுடன் தவறானதுமாகும். ஆங்கிலம் உலக மொழி என்ற வகையில் எமது சொந்த மண்ணில்தமிழைஇரண்டாம் இடத்துக்குத்தள்ளுவது நியாயமானதல்ல என்று அருட்திரு எஸ். ஜே. இம்மானுவல் தெரிவித்தார்.

கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருமனையில் கார்டினல் நியூமன் ஆங்கில அக்கடமி தினத்தில் பேசும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்,

இரண்டாம் மொழியைக் கற்பதனால் தமிழ் பின்னடையும் என்று ஊகித்தறிவது எமது அனுபவத்துக்குப் புறம்பானது. தமிழ் மொழியுடன் எம்மை மட்டுப்படுத்திக் கொண்டால், மொழி அடிப்படையில் தனிமைப்படுத்தப்பட்டு அறிவைத் தேடிக்கொள்ள பலரிழப்போம். தமிழ் ஈழத்தின் கலாசாரம், சமூக பொருளாதார வளங்களை விருத்தி செய்வதற்கு நாம் உலகின் மற்றவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான பக்குவத்துடன் இருக்க வேண்டும் என்றார்.

## வீதி விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய்ச் சந்தியில் நேற்றுக் காலை இடம் பெற்ற வீதி விபத்தொன்றில் கந்தையா கணேச குலசிங்கம் (வயது 40) படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரியில் வந்து கொண்டிருந்த கந்தையா கணேச குலசிங்கம் லொறி ஒன்றுடன் மோதியதால் கால் முறிந்த நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

# வவுனியா சென்றடைவதில் பயணிகள் பெரும் சிரமம்

(வவுனியா)

வவுனியா நகரப்பகுதியூடாக வடபகுதி பயணிகள் தென்பகுதிக்கான போக்குவரத்தை மேற்கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்த 13ஆம் திகதிக்குப் பின்னர் யாழ். வவுனியா பிரதான வீதியூடாக வவுனியா நகரப்பகுதி நோக்கி போக்குவரத்தை மேற்கொள்ளும் பயணிகள் பல மைல் தூரம் கால்நடையாகச் செல்லவேண்டியுள்ளது.

இடையில்ஆறு, வயல்வெளி, பற்றைக்காடுகள் வழியாக பயணம் மேற்கொள்ளும் பிரயாணிகளின் பலர் மயக்கம் ஏற்பட்டு விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பேயாடி கூழாங்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது நிலைகளை பலப்படுத்துவதை பொதுமக்கள் அவதானிக்கின்ற காரணத்தினாலும், தமிழ் மக்களுக்கு அதிகளவிலான அத்தியாவசியப் பொருள்கள் விரைவில் சென்றடைவதை தடை செய்யும் நோக்குடனும் காட்டுப்பாதை வழியாகப் பொதுமக்கள் போக்குவரத்து மேற்கொள்வதற்கு இராணுவம் நிர்ப்பந்தித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி சிரமமான பாதை வழியாக மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ளும் போது திருடர்களின் அச்சுறுத்தலும் ஏற்படுகின்றது என்றும் கூறப்பட்டது.

தவிர, வவுனியா நகரை நோக்கிச் செல்பவர்களில் ஊழியர் அடையாள அட்டை வைத்திராதோர் அனைவரும் தாண்டிக்குளம் இராணுவத் தடை முகாமில் சைக்கிள்களை நிறுத்தி விட்டு நகரை நோக்கிச் செல்ல வேண்டும் என்று இராணுவத்தால் தெரிவிக்கப்பட்டு, நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. (தி)

## தொழிற்சங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகர் காரைநகர் நோர்வேலைத் தொழிற்சாலை ஊழியர்களின் சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க இரு தொழிற்சங்கங்கள் நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன.

கொழும்பில் அதற்கான ஆயத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து செல்ல இருக்கும் ஐக்கிய தொழில் பொதுத் தொழிலாளர் சங்கமும் இணைந்து கொண்டதும் நடவடிக்கை ஆரம்பமாகுமென தெரிவிக்கப்படுகிறது.

# ராஜீவ்கொலைதொடர்பான விசாரணை தொடர்கிறது

(சென்னை)

ராஜீவ் காந்தியின் மரணத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளை சந்தேகிக்கத்தகுந்தகாரணங்கள் இருந்த போதிலும், இவரைக்கொல்ல வேறு யாராவது விரும்பியிருக்கக் கூடிய சாத்தியத்தை தாம்நிராகரிக்கவில்லை என்று புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் சென்னையில் இதனைத் தெரிவித்த புலனாய்வுத் துறையினர் துப்புத்துலக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் இது குறித்து இன்னமும் ஒரு முடிவிற்கும் வர முடியாதிருக்கிறது என்றும் தெரிவித்தனர்.

ராஜீவ் காந்தியின் மரணத்திற்கு காரணமாக இருந்த தற்கொலைப் படை பெண்ணின் அடையாளம், விசுவாசம் குறித்து விசாரணையாளர்கள் இன்னமும் திறந்த மனத்துடனேயே உள்ளனர் என்றும் இவர்கள் தெரிவித்தனர்.

## ஆஸ்திரிய விமான விபத்தில் 223 பேர் பலி

(பாங்கொக்)

ஆஸ்திரியாவின் விமானம் ஒன்று பாங்கொக்கிற்கு வடக்கே வெடித்துச் சிதறியதில் அதில் பிரயாணம் செய்து கொண்டிருந்த 223 பிரயாணிகளும் உயிர் இழந்துள்ளனர்.

நேற்றுக் காலைஇந்த துயரச் சம்பவம் நிகழ்ந்தது. இதில் பிரயாணம் செய்த சகல பயணிகளும் உயிர் இழந்ததாக கூறப்படுகிறது. இந்த விமானம் பாங்கொக்கிலிருந்து வியன்னா சென்று கொண்டிருந்ததாக சொல்லப்படுகிறது. இந்த விமானத்தின் சிதைவுகள் காட்டுப் பகுதியிலேயே விழுந்ததாகவும் செய்திகள் கூறுகின்றன.

# புலன் விசாரணைக்கு பூரண ஒத்துழைப்பு

(டில்லி)

ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பாக மேற்கொள்ளப்படும் புலன்விசாரணைகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் பூரண ஒத்துழைப்பு வழங்கும் என சிறிலங்கா பிரதமர் டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் சந்திரசேகரை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே டி. பி. விஜயதுங்கா இவ்வாறு தெரிவித்தார்.

# சிறிபெரம் புதூரில் இறந்தோருக்கு ஐந்து லட்சம் ஒதுக்கீடு

(டில்லி)

சிறிபெரம்புதூரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இறந்து போனவர்களின் குடும்பத்தவர்களுக்கு ஐந்துலட்சம்ரூபாயை நிதியினை வழங்க பிரதமர் சந்திரசேகர் அனுமதியளித்துள்ளார்.

பிரதமரின் உதவி நிதியத்திலிருந்து இப் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயணனுடன் கலந்தாலோசனை செய்த பின்னர் இம் முடிவெடுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதே நேரம் தமிழகஅரசின் ஆளுநர் நிதியத்தில் இருந்தும் பத்தாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

# 30 அவுன்ஸ் நிறையில் உயிருடன் பிறந்த குழந்தை

(புளோரிடா)

அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தில் எடையில் மிகக் குறைந்த குழந்தையொன்று பிறந்துள்ளது. 30 அவுன்ஸ் அதாவது ஒரு கிலோவுக்கும் குறைவான இக் குழந்தை தொடர்ந்து உயிர் வாழ்வது கடினம் என வைத்தியர்கள் கூறியுள்ளார். குழந்தை வயிற்றில் இருந்த போது தாயின் சூலில் அளவுக்கதிகமான புரதம் இருந்ததால் இந் நிறைக் குறைவு ஏற்பட்டிருக்குப்பதாக டாக்டர்கள் கூறியுள்ளனர்.

# ஆயுத வர்த்தகம் தொடர்பாக புதிய அணுகுமுறை வேண்டும்

ஆயுத உற்பத்தி வர்த்தகம் தொடர்பாக அணுகுமுறை யொன்று கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று ஐக்கிய நாடுகள் அமைப்பு ஆயுதப் பரிகரண மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகள் கோரியுள்ளார்கள்.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் இவான் கருத்துத் தெரிவிக்கையில், ஆயுத உற்பத்தி, வர்த்தகத்துறை ஐ நாவின் கீழ் பதிவு செய்து கொள்வது பயன் பொருத்தமான நடவடிக்கையாகும் என்றார்.

யப்பானில் நடைபெறும் நான்குநாள் ஆயுதப் பரிகரண மாநாட்டிலும் 37 நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும், நிபுணர்களும் கலந்து கொள்கிறார்கள்.

பாரம்பரிய ஆயுதங்களின் விற்பனையைச் சீர்ப்படுத்துதலும், இரசாயன ஆயுதத் தடையைத் தீவிரமாக அமுல் செய்தலும், அணுவாயுதப் பரம்பல் உடன்படிக்கையைத் தீவிரமாக அமுல்படுத்துதலும் ஆகிய விடயங்கள் குறித்து இந்த மாநாட்டில் முக்கியமாக ஆராயப்படுகின்றது.

இரசாயன ஆயுதங்களைத் தடை செய்வதற்கான உடன்படிக்கை தடை செய்யப்பட்டதும், அமெரிக்கா தன்வசம் உள்ள இரசாயன ஆயுதங்களை எல்லாம் அழித்துவிடும் என்று ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அண்மையில் தெரிவித்திருப்பது குறித்து மாநாட்டின் பிரதிநிதிகள் மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

---

சிறிலங்காவில்
புனிப்புரையின் கீழும் இவர்கள்விடுதலை செய்யப்பட்டனர்.

இதே நேரம் மரணதண்டனை விதித்த கைதிகளுக்கு ஆயுள் தண்டனையும் என சிறைத் தண்டனைகள் குறைக்கப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

ஒருவர்
வற்றைடபகுதிக்கு கொண்டு வர அனுமதி வழிக்கப்பட்டிருப்பதாகவும் கொழும்புப்பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

சீனி, மா உட்பட அத்தியாவசிய உணவுப் பொருள்களை தாராளமாக எடுத்துச் செல்லவும் ஒரு பயணி தம்முடன் ஆறுபற்றறிசையைகொண்டு செல்லவும், விவசாயிகள் ஒவ்வொருவரும் இருபது லீற்றர் மண்ணெண்ணையை எடுத்துச்செல்லலாம் என்றும் அனுமதியளிக்கப் பட்டுள்ளதாகவும் அச்செய்திகள் கூறுகின்றன.

---

வடபகுதிக்கான
பயிற்சிப் பாடசாலைகளுக்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு கடற்றொழில் அமைச்சு துரிதநடவடிக்கையை எடுத்தது.

இதனால் வடபகுதி மீன்பிடித்தொழில் வளர்ச்சி அடைவது தடைப்பட்டுள்ளதுடன் தற்போது வடபகுதியில் மீன்பிடித்துறையுடன் சம்பந்தப்பட்ட எந்தவித பயிற்சித்திட்டமும் நடைமுறையில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ் அஸ்திக்கு மக்கள் அஞ்சலி

(புதுடில்லி)

திரிவேணி சங்கமத்தில் கரைப்பதற்காக ராஜீவ் காந்தியின் அஸ்தி புதுடில்லியிலிருந்து அலகபாத்துக்கு நேற்று எடுத்துச்செல்லப்பட்டது. அஸ்தி அடங்கிய கலசங்களை எடுத்துச் சென்ற புகையிரதம் தரித்துநின்ற நிலையங்களில் மக்கள் திரளாகக்கூடி, மறைந்த தலைவருக்கு அஞ்சலி செலுத்தினார்கள்.

நேற்று முற்பகல் புதுடில்லியிலிருந்து புறப்பட்ட இந்த சிறப்புப் புகையிரதத்தில் திருமதி சோனியா காந்தி, ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, நெருங்கியநண்பர்கள், உறவினர்கள், காங்கிரஸ் கட்சி செயற்குழு உறுப்பினர்கள், இந்திய அரசின் பிரதிநிதியாக மத்திய பெற்றோலிய மற்றும் இரசாயனத்துறை அமைச்சர் சந்திரப்பிரகாஸ் மாளவியாவும் உடன் சென்றார்.

முன்னதாக மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பீரங்கி வண்டியில் அஸ்திக் கலசங்கள் தீன்மூர்த்தி பவனத்திலிருந்து இராணுவ மரியாதையுடன் புகையிரத நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இன்று காலை அஸ்திக் கலசம் அலகபாத் வந்துசேரும். நேரு குடும்பத்தின் பூர்வீக இல்லமான ஆனந்தபவனுக்கு அஸ்தி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும். பொதுமக்களின் இறுதி அஞ்சலிக்காக நாளை பிற்பகல்வரை அங்கு வைக்கப்படும்.

இன்று மாலை கங்கை, யமுனை நதிகளுடன் கண்களுக்குப் புலப்படாத சரஸ்வதி சங்கமமாகும் திரிவேணியில் முழு இராணுவ மரியாதையுடன் அஸ்தி கரைக்கப்படும்.

தீன்மூர்த்தி இல்லத்திலிருந்து ஏனைய மாநிலங்களுக்கும் அஸ்திக் கலசம் காங்கிரஸ் செயற் குழுவினர்மூலம் கொண்டுவரப்படும். பொதுமக்களின் அஞ்சலிக்கு வைத்த பின்பு, நதிகளில் கரைக்கப்படும்.

# ராஜீவ் அஸ்தி பஞ்சாப்பில் கரைக்க மான் எதிர்ப்பு

(டில்லி)

சீக்கிய அரசியல் கட்சியான அகாலி தளத்தின் தலைவர் சிம்ரஞ்சித் சிங் மான் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் அஸ்தியைப் பஞ்சாப்பில் கரைப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் அஸ்தியைக் கரைத்தால் அங்கு வகுப்புவாத வன்முறைகள் சம்பவிக்கலாம் என தான் அஞ்சுவதனால் மாநில அரசிடம் இப்படியான ஒரு வேண்டுகோளைத் தான் விடுத்ததாக மான் தெரிவித்தார்.

# விசாரணைக் குழுவிற்கு வர்மா தலைவராகத் தெரிவு

(டெல்லி)

முன்னாள் பிரதம மந்திரி ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணைக் குழுவிற்கு உயர் நீதிமன்ற நீதிபதி ஜே. எஸ் வர்மா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான ராஸ்டிரபதியின் அறிவிப்பு நேற்றையதினம் புதுடில்லியில் வெளியிடப்பட்டது. ராஜீவ்காந்தியின் பாதுகாப்புக்குக் காரணமாகவிருந்தவர்கள் இழைத்திருக்கக் கூடிய கவனக் குறைவான தவறுகள் பற்றியும் இவ்விசாரணைக்கமிஷன் ஆராயுமென அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தப் பெருந்துயர் பேரழிவுக்கு வழிவகுத்திருக்கக் கூடிய பந்தோபஸ்து ஏற்பாட்டு முறையிலான சில குறைபாடுகளையும் கூட இக் கமிஷன் விசாரிக்கவுள்ளது.

கமிஷன் மூன்றுமாத காலத்திற்குள் தமது முழு அறிக்கைகளையும் அரசாங்கத்திடம் சமர்ப்பித்துவிடும் என தெரிய வருகிறது.

---

விளையாடிய
மாரியான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலினால் பீதியடைந்த சிறுவர்கள் வீடுகளை நோக்கி ஓடி விட்டார்கள். இதனால் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. மேற்படி தாக்குதலை நடாத்திய அப் பிரங்கிப் படகு பல மணி நேரமாக ஒரே இடத்தில் தரித்து நின்ற பின்னரே அப்பால் சென்றதாம். (22)

---

## மரண அறிவித்தல்

### திரு. கந்தையா பாலசுப்பிரமணியம்

வேலணை கிழக்கைச் சேர்ந்த காலஞ் சென்ற கந்தையா, நாகரெத்தினம் தம்பதிகளின் மகனும், கொழும்பு நிரோஷன் ரேடர்ஸ் உரிமையாளருமாகிய திரு க. பாலசுப்பிரமணியம் 26-05-91 இல் கொழும்பில் காலமானார். இவர் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், நிரோஷன், சுலக்சனா ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆறுமுகம் தம்பதிகளின் மருமகனும், நேசராசா, யோகநாதன் (பிரான்ஸ்), பரமேஸ்வரி, முத்துலெட்சுமி, மீனலோசினி, விமலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், மகாலிங்கம், மன்னர்பிரான், பூமிபாலன், கிருஷ்ணாம்பிகை, புனிதவதி, கலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-05-91 இன்று செவ்வாய் மாலை 2-00 மணிக்கு வேலணை கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சாட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

தகவல் தருபவர்
க. நேசராசா

வேலணை கிழக்கு.

(R/1417)

---

# அமெரிக்க மேற்பார்வையில்
# கிளர்ச்சிக் குழுக்களுடன் எத்தோ. அரசாங்கம் பேச்சு

(அடிஸபாபா)

எத்தியோப்பிய அரசாங்கத்திற்கும் அங்குள்ள மூன்று பிரதான கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்களை அமெரிக்கா நடத்திவருகிறது.

நேற்றுக் காலை லண்டனில் தொடங்கிய இப்பேச்சுக்களை அமெரிக்க மத்தியஸ்தர்களால் நடத்தப்படுகிறது. இப்பேச்சுக்கள் தனித்தனியே நடைபெறுகின்றது என தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் எத்தியோப்பிய பிரதம மந்திரி உடனடியான போர்நிறுத்தத்தைதாம் விரும்புவதாகவும், இதன் பின்னர் அனைத்துக் கட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க விரும்புவதாகவும் தெரிவித்தார்.

# எதியோப்பியப் படைகள் நாட்டைவிட்டு ஓட்டம்

(அடிஸ்அபாபா)

எதியோப்பிய தலைநகரான அடிஸ்அபாபாவின் சர்வதேச விமான நிலையத்தைக் கைப்பற்றிவிட்டதாக தீவிரவாதக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

அஸாப், மசாதா துறைமுகங்கள் தங்களின் ஆதிக்கத்துள் வந்து விட்டதாகவும், இதே சமயம் உலக நாடுகள் உணவு உதவி அனுப்ப துறைமுகங்களில் அனுமதி அளிக்கப்படும் என்றும் இக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை லண்டனில் நடக்கும் பேச்சுவார்த்தைகளில் ஓர் முடிவு ஏற்படும்வரை தலைநகரைத் தாம் கைப்பற்றப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இங்கு கடும் சண்டை நடப்பதால் எதியோப்பிய மக்களும் வெளிநாட்டினரும் சாரிசாரியாக அந் நாட்டைவிட்டு வெளியேறத் தொடங்கிவிட்டதாகவும், ஆயிரக்கணக்கான அரச படைவீரர்கள் முன்பாகவே வெளியேறிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எதியோப்பிய விமானப் படையின் 14 விமானங்களும் எதியோப்பியாவில் இருந்து வெளியேறிவிட்டன. கடற்படையினரும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர்; யூதர்களை இஸ்ரேலிய விமானங்கள் இப்பகுதியில் இருந்து வெளியேற்றிய வண்ணமுள்ளன அடிஸ்அபாபா விமான நிலையத்தில் வெளிநாட்டார் கூட்டங் கூட்டமாகக் காணப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# விமான விபத்திற்கு குண்டு வெடிப்பே காரணம்?

(பாங்கொக்)

அமெரிக்க நாட்டு விமானத்திற்குள் வைக்கப்படத் திட்டமிடப்பட்டிருந்த வெடிகுண்டே நேற்று விபத்திற்குள்ளான ஆஸ்திரிய நாட்டு போயிங் 767 ரக விமானத்திற்குள் தவறுதலாக வைக்கப்பட்டுள்ளதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

விபத்திற்குள்ளான ஆஸ்திரிய நாட்டு விமானத்திற்குள் தவறுதலாக வெடிகுண்டு வைக்கப்பட்டு விட்டதாக தனது பெயர், விபரங்களை அறிவிக்காத நபரொருவர் வியன்னாவில் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தார்.

---

மட்டு. திருப்பழுகாமத்தில்
25ஆம் திகதி காலை 7-30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப் பகுதியில் உள்ள பெரிய போரதீவு முகாமைச் சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ இயக்கத்தினரும் திருப்பழுகாமம் கிராமத்திலுள்ள தம்பிமுத்துப்போடி செல்லத்துரை (வயது 47) என்பவரைக் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இவர் அன்றைய தினமே ரெலோ இயக்கத்தினராலும் சிறிலங்கா இராணுவத்தினராலும் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து அடுத்த நாள் 26ந்திகதி காலை 6-00 மணி தொடக்கம் 7-30 மணி வரை மீண்டும் இதே கிராமத்தை முற்றுகையிட்ட இவர்கள் செல்லையா பகீரதன் (26 வயது), கந்தையா கனாநாதன் (17 வயது) இருபிள்ளைகளின் தந்தையான காளிக்குட்டி அழகையா ஆகியோரைக் கைது செய்து இவர்களது குடும்பத்தினருக்கு முன்னால் அந்த இடத்திலேயே வெட்டிக் கொன்றுள்ளனர்.

அத்துடன் சோமசுந்தரம் கணேசன் (22 வயது) மற்றும் மாணவர்களான பொன்னம்பலம் நடேசன் (16 வயது), புண்ணியமூர்த்தி ரகுநாதன் ஆகியோரைக் கைதுசெய்து தமது முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

செல்லும் வழியில் நித்தியானந்தன் என்பவருக்குச் சொந்தமான புடைவைக் கடையையும், புண்ணியமூர்த்தி என்பவருக்குச் சொந்தமான சில்லறைக் கடையையும் கொள்ளையடித்து அவற்றைத் தீமூட்டி எரித்துள்ளனர்.

---

எட்டுமாத காலமாக
களை, இராணுவத்தடைமுகாமைத்தாண்டிக்கொண்டு செல்வதற்கு இராணுவம் தடைவிதித்துள்ளது.

வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் உதவி அரசாங்க அதிபர், வவுனியா தெற்கு தமிழ்ப் பகுதி கூட்டுறவுச் சங்கத் தலைவர் ஆகியோர் நிவாரணப் பொருள்களை கிராமங்களுக்கு கொண்டு செல்வதற்கு முயற்சி எடுத்த போதிலும், இராணுவம் விதித்த தடையில் எதுவித தளர்வும் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த மாதிரி போறாத நிவாரணப் பொருள்களும் வவுனியா நகரப் பகுதியில் தேங்கியுள்ளன.

பனையமடு, ஈச்சங்குளம், மாதர்ப் பணிக்கர் மகிழங்குளம். ஆகிய இடங்களில் அமைந்திருந்த கூட்டுறவுச் சங்கக் கிளைகள் அண்மைக் கால அரசபடையினரின் தாக்குதல் நடவடிக்கையின் போது முற்றாகச்சேதமடைந்துள்ளன.

---

நினைவஞ்சலி
வெட்டி மாவீரர் கலையரங்கத்தில். நடைபெற்றது பெருந்திரளான மக்கள் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்களான பேபிஅண்ணா, தேவர் மற்றும் யாழ் மாவட்ட அரசியல் துணைப்பொறுப்பாளர் பாப்பா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மறைந்த மாவீரர்கள் இருவரதும் உருவப்படங்கள் மூத்த உறுப்பினர் பேபி அண்ணா அவர்களால் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டது. (ச)

---

மீனவரை
தலையும் நேற்று முன்தினம் மேற்கொண்டனர். இதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்லுவதற்கு அஞ்சுகின்றனர்.

(ச)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.